

# " ஸ்ருதி லயம் "

" வெள்ளிவிழா பூர்த்தியினையிட்டு வெளியிடப்படுகின்ற ஆவணப்பதிவு "



வெளியீடு:-

## ஸ்ரீ சாயி கலைக்கழகம்

## உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"ஸ்ருதி லயம்" எனும் இந்த ஆவணப்பதிவேடு
மானசீகமான குரு மதிப்பிற்குரிய

**ஆ.சி. நடராசா**

அவர்களுக்கு சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்பு நடனப் பாடல்

ஆக்கம் :- திரு.மானிப்பூர் ரட்னேஸ்வரன்
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

**இராகம்:- காபி** **தாளம்:- ஆதி**

வெள்ளி மலர் பூத்தது - கலை
உள்ளம் நிறைந்த
உன்னத வாணியின் அருளாலே

(வெள்ளி)

ஸ்ரீ சாயி கலைக்கழக ஆற்றுகையால்
சீரோங்கி, தமிழ்பாடி, சிரம் தாழ்த்தி
வந்தோரை வரவேற்கின்றோம்

**இராகம்:- ஹிந்தோளம்** **தாளம்:- ஆதி**

கலைமுகிழ் சங்கமத்தை
காண வந்து களிப்படையும்
வளமார்ந்த பிரதமரே
வல் சிறப்பு அதிதிகளே
பலமாமும் கௌரவம்
பண்புசார் விருந்தினரே
உளமார்ந்த வரவேற்பின்
உவகையினால் மலர்கின்றோம்

(வெள்ளி)

சான்றாய் சாயிக் கழகத்தின்
சரித்திர வெள்ளி விழாக் கண்டு
ஊன்றிக் கலையில் உரம் சேர்க்கும்
உயர்தரு கலையின் வித்தகரே
ஆன்றோர் சான்றோர் பெரியோரே
அருமைக் கலையின் அன்பர்களே
மாண்புடன் வணங்கி வரவேற்றும்
மகிழ்வுடன் யாவரும் வருகவே நீவீர் !

(வெள்ளி)

இசை :- திருமதி சிவை குகநேசன்
பணிப்பாளர்,
உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழக கீதம்

ஆக்கம் :- திரு.ஆ.ரவீந்திரன்
தலைவர், வாழ்வகம் - சுன்னாகம்,
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

## பல்லவி

வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம் - எங்கள்
ஸ்ரீ சாயி கலைக்கழகம்
வாழ்க வாழ்க வாழ்க என்று
வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்.

## அனுபல்லவி

நீராருங் கடலுடுத்த நித்திலமாம் எமது நாட்டில்
சீரார்நற் கலை வளர்க்கும் சீரியநம் கழகமிதை
வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்

## சரணம்

சங்கீதந் தளைத்திடவே சந்ததமும் பணிசெய்யும்
மங்காத பெருமைமிகு மாண்புடைய கழகமிது
சிங்காரக் குரலிசையும் சீர்மிகு நற் கருவிகளும்
எந்நாளும் பயிற்றுவித்து ஏற்றந்தரும் கழகமிதை

(வாழ்த்துவோம்)

சாஸ்திரிய சங்கீதம் சகத்தினிலே தளைத்தோங்க
சங்கடங்கள் யாவும் நீங்கி மங்கலநம் வாழ்வில் பொங்க
நேத்திரமாய்க் கலைகள் போற்றி நீண்ட நோக்கில் செயல்களாற்றி
காத்திரமாய்ப் பணிபுரிந்து கலைவளர்க்கும் கழகமிதை

(வாழ்த்துவோம்)

சாயிநாதன் மலரடியைச் சார்ந்து நிற்கும் கழகமிது
சார்ந்தவர்கள் யாவரையும் தாங்கி நிற்கும் கழகமிது
சேமமுடன் யாரும் வாழ சேவை செய்யும் கழகமிது
சிவைகுகநேசன் மனதில் உதித்தெழுந்த கழகமிது

(வாழ்த்துவோம்)

இசை :- இசைவாணர் கண்ணன்

பாடியவர்கள் :- செல்வி வருணியா தில்லைநாதன்
செல்வி யஜீவா சத்தியசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழக
## " ஸ்ருதிலயம் " ஆவண பதிவேட்டிற்கான ஆசிரியுரை

உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகம் " வெள்ளி விழா" காணுகின்றது.இவ் வெள்ளிவிழாவைக் கொண்டாடும் வகையில் " ஸ்ருதி லயம்" என்னும் ஆவணப் பதிவேடு என்ற பெயரில் மலர் ஒன்றை வெளியிட இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

கடந்த 25 வருட காலத்தில் ஸ்ரீ சாயி கலைக்கழகம் ஆற்றிய பணிகளும் சேவைகளும் நினைவு கூர்த்தக்கன.வாய்ப்பாட்டு, வயலின், ஓர்கன்,தபேலா, நடனம் ஆகிய துறைகளில் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தும் அரங்க ஆற்றுகைகளை நிகழ்த்தியும் மாணவர்களின் ஆற்றல் விருத்திக்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் இக் கழகம் உறுதுணையாக இருப்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே.இப் பணிகளை சிறப்புற ஆற்றிவரும் வகையில் ஸ்ரீ சாயி கலைக்கழகம் மக்கிடையேயும் பெற்றோரிடையேயும் மதிப்பைப் பெற்று, செல்வாக்கு மிளிர்ந்து காணப்படுகின்றது.இக் கலைக்கழகத்தின் பணிப்பாளர் திருமதி சிவை குகநேசன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சங்கீதத்துறைக்கான சிரேஷ்ட விரிவுரையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ சாயி கலைக்கழகத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் பல்வேறு போட்டிகளிலும் பரீட்சைகளிலும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியும் திறமைச் சித்தி பெற்றும் சாதனை புரிந்து வருகின்றார்கள்.இக் கலைக்கழகத்தில் பெற்ற பயிற்சிகளோடு, இக் கலைக்கழக மாணவர்கள் க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தரம் பரீட்சைகளில் உயர்சித்திகளைப் பெற்று வருவதும், வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைகளில் ஏராளமானவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருவதும் தமிழ்த்தின போட்டி, தேசிய மட்டப் போட்டிகளிலேயே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுவருவதும் பண்ணிசைப் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்று, தங்கப் பதக்கங்களைச் சுவீகரித்திருப்பதும் பட்டியலிடப்படக்கூடிய இக் கழகத்தின் சாதனைகளாகும்.

மேலும், ஆலயங்கள், சமூக நிறுவனங்கள், பிரதேச செயலகங்கள் போன்றவை நடாத்தும் போட்டிகளிலும் பங்குபற்றி பரிசுகளைப் பெற்றுவரும் இம் மாணவர்களின் ஆற்றல்களைக் கண்டு களிக்கும் வகையில், ஸ்ரீ சாயி கலைக்கழகம் ஆண்டு விழாவினையும் வாணிவிழாவையும் ஏற்பாடு செய்து சகல மாணவர்களும் இவ் விழாக்களின் நிகழ்வுகளில் பங்குபெறச் செய்வதும் கூட பெற்றோரிடம் வரவேற்பைப் பெற்றுள்ளன.இக் கலைக்கழகம் இருவரின் மிருதங்க அரங்கேற்றங்களைச் செய்திருப்பதும் கூட போற்றுதற்குரியது.

க.பொ.த உயர்தரத்தில் சங்கீதத்தை ஒரு பாடமாக தமது மாணவர்களை எடுக்கச் செய்து இராமநாதன் நுண்கலைப் பீடத்திற்கோ அல்லது கல்வியியற் கல்லூரிக்கோ, பல்கலைக் கழகங்களுக்கோ அனைத்தும் மாணவர்களையும் அனுமதி பெறக்கூடிய வகையில் ஸ்ரீ சாயி கலைக்கழகம் அளப்பரிய சேவை செய்து வருவது பாராட்டப்பட வேண்டியதும் மனங்கொள்ளத்தக்கதும் ஆகும்

இக் கலைக்கழகம் தொடர்ந்தும் சிறந்த பணியாற்றவும் தமது சேவைகளை விரிவுபடுத்தவும் வாழ்த்தி, இறை ஆசியை இறைஞ்சுகிறேன்.

**கலாநிதி. த. கலாமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழக
## " ஸ்ருதிலயம் " ஆவண பதிவேட்டிற்கான ஆசிரியுரை

மனித மனத்தின் மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும் உறைவிடமாய் விளங்கும் கலைகள் எமது வாழ்விற்கு வளம் சேர்ப்பன.இவை புனிதமானவை.இறையுணர்வு நிரம்பப் பெற்றவை. இறைவனை நாம் கலைகளால் அர்ப்பணித்து வணங்குகின்றோம்.இறைவனின் ஆடல்தோற்றங்கள் இக் கலைகளின் பழமையையும், மனித வாழ்க்கைத் தத்துவங்களையும் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.இதன் அடிப்படையில் இன்றைய பரபரப்பான வாழ்வியல் முறைகளில் கூட கலைக்கு நாம் முதலிடம் கொடுத்து வருகின்றோம்.இதனை எம்முடைய நாளாந்த வாழ்வியல் முறைகளில் காணமுடிகின்றது.

இத்தகைய கலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதன் மூலமான ஒரு சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நிலையில் பல கலைக்கூடங்கள் இன்று இயங்கி வருகின்றன.அவற்றுள் உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகமும் முக்கியம் என்பது மிகவும் மகிழ்ச்சியான ஒரு விடயமாகும்.இதனையொட்டி "ஸ்ருதி லயம்" என்னும் ஆவணப் பதிவேடு ஒன்றையும் வெளியிடுகின்றது.கலைகள் தொடர்பாக பல பயிற்சி நெறிகள் இடம்பெறுகின்றன.சில அரங்கேற்றங்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.வட இலங்கை சங்கீதசபை பரீட்சைகளில் 60 மேற்பட்ட மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்ததுடன் க.பொ.த சாதாரண தரம், உயர்தரம், தமிழ்த்தினப் போட்டிகள் போன்றவற்றிலும் பங்குபற்றி சிறந்த தேர்ச்சிகளைப் பெற்றுள்ளார்கள்.தங்கப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டமை பாராட்டத்தக்கது.

வருடந்தோறும் ஆண்டுவிழா, ஏனைய விழாக்கள் நடைபெறுகின்றன.குறிப்பாக க.பொ.த உயர்தரத்தில் சங்கீத பாடத் தெரிவு செய்த மாணவர்கள் அனைவரும் உயர்கல்வி வாய்ப்புக்களை இராமநாதன் நுண்கலைப்பீடம்,தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பெற்றுக் கொண்டமை உண்மையில் எமது சமுகத்திற்கு மிகப்பெரியதொரு வரப்பிரசாதமாகும்.பட்டப் படிப்புக்களுக்குக் கூட இந் நிறுவனம் வழிகாட்டியுள்ளமை மிகப்பெரிய சமூக சேவையாகும்.

இத்தகைய உயர்சேவைகளை ஆற்றுகின்ற இக் கல்லூரி தொடர்பாக நன்கறிவேன்.ஒரு தடவை நானும் ஒரு விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டேன்.நிர்வாகி எனது விருப்புக்குரிய சிறந்த மாணவி, அவ்வகையில் திருமதி சிவை குகநேசன் அவர்களின் முயற்சியால் இவ் விழாவையொட்டி வெளிவரும் இவ் ஆவணப் பதிவேட்டிற்கான ஆசிச்செய்தியை வழங்குவதில் பெரும் மகிழ்வு அடைகின்றேன்.

" வளர்க அவர் பணி "

**கலாநிதி திருமதி.ஜெ.இராசநாயகம்**
தலைவர்,
கல்வியியற் துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழக வெள்ளி விழாவிற்கான வாழ்த்துச் செய்தி

" நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டா
சொல்லடி சிவசக்தி - என்னைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே "

என மகாகவி பாரதியார் சிவசக்தியிடம் வரம் கேட்பது போல் இந்த உலகு பயன்பட வாழ்வதற்கு வரம் பெற்று வாழ்பவர் திருமதி.சிவை குகநேசன் அவர்கள்.தான் வாழ்ந்தால் போதும் என வாழ்வது விலங்குவாழ்வு. பிறர்வாழ வேண்டும் எனப்பயன்பட வாழ்வதே மனிதவாழ்வு.

எமது வாழ்வு தெவிட்டாது இசைதரும் வீணை போன்றது.வீணையைச் சரியாக மீட்டினால் அதிலிருந்துவரும் இசை தன்னையும் மிகழ்வித்துக் கேட்போரையும் மகிழ்விக்கும். அதுபோல நமது வாழ்வும் நமக்காகவும் பிறர்க்காகவும் வாழ்வதாய் அமைய வேண்டும்.

இவர் தன் பெற்றுக் கொண்ட கல்வி அறிவு ஆற்றல், பண்பாடு அத்தனையையும் கொண்டு உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகத்தை தொடங்கி, இன்று வெள்ளி விழா காணும் நிலைக்கு கொண்டு வந்துள்ளார்.இக் கலைக்க கழகத்தின் ஊடாக வாய்ப்பாட்டு, வயலின், ஓர்கன், நடனம், தபேலா, மிருதங்கம் ஆகிய துறைகளில் மாணவர்களை பயிற்றுவித்து அத்துறைகளில் பாண்டியத்தியம் உடையவர்களாக்கி வருகின்றார்.

ஸ்ரீ சாயி கலைக்கழகத்தில் பயின்ற மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றி தங்கப்பதக்கங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகு" எனச் சங்கப்புலவர் கூறுவது போல இவர் சைவத்தமிழ் உலகை வாழவைத்துக் கொண்டிருக்கின்றார்.

இக் கலைக்கழகம் மேலும் பல ஆண்டுகள் சிறப்புற்று விளங்கும் இக்கலைக்கழக நிறுவுனர் திருமதி.சிவை குகநேசன் அவர்களும் பல ஆண்டுகள் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி ச.அமிர்தலிங்கம்**
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழக
## " ஸ்ருதிலயம் " ஆவண பதிவேட்டிற்கான வாழ்த்துரை

உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகம் இவ்வாண்டு வெள்ளிவிழாவைக் கொண்டாடுகின்றது. இந் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு வித்தாக அமைந்தது "கலைக்குரிசில்" கல்வியியலாளர் திருமதி சிவை குகநேசன் அவர்களின் சங்கீத புலமைசார் ஆற்றலாகும். அவர் எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மிகவும் உயர்ந்த ஆளுமை பொருந்திய மூத்த சங்கீதத் துறை கல்வியியலாளர். தன் குரலின் ஆளுமையால் உயர்ந்த ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கிய சிற்பி. எந்தக் காரியத்தை எடுத்தாலும் இறைபக்தியுடன் நேர்மையாக நீதியாக உழைக்கும் அர்ப்பண ஆசிரியத்துவ நோக்குடையவர். மிகச் சிறந்த நல்லாசிரியை. தன் இசைத் துறையில் மிக உயர்ந்த நிபுணத்துவம் உடையவர். அவர் எமது கல்லூரி மேடையில் பாடுகின்றார் என்றால் எல்லோருமே சபைக்கு ஓடி வருவார்கள்.

இவ்வாறான ஆற்றலுடைய திருமதி சிவை குகநேசன் அவர்களின் முகாமைத்துவத்தில், வழிகாட்டலில், ஆசிரியத்துவத்தில் இன்று இருபத்தைந்து வருடங்களைப் பூர்த்தி செய்து உயர்ந்து நிற்கின்றது. உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகம் எம் மண்ணின் மாணவர்களுக்குத் தேவையான இயல், இசை, நாடகம் மற்றும் இசைக்கருவிகளை இசைத்தல், பாடசாலைக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்வி வரை அழகியல் பாடங்களை மிக அர்ப்பணிப்புடன் கற்பித்து வரும் கலைக்கூடமாகத் திகழ்கின்றது.

இங்கு பயிலும் மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் தேசிய ரீதியில் நடைபெறும் போட்டிகளில் மிக உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனைப்படைத்துள்ளனர். க.பொ.த உயர்தரத்தில் பயிலும் சங்கீதத் துறை மாணவ மாணவியர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகங்களுக்கும், தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கும் தெரிவாகி வருகின்றனர். இதற்கு இங்கு கற்பிக்கும் சிறந்த விரிவுரையாளர்களின் அர்ப்பணிப்பும் முகாமையாளரின் வழிகாட்டலுமே ஆகும். இவ் வகையில் தமிழர் தம் பண்பாடு கலை கலாச்சாரம் சைவசமய அறநெறிகளைக் கலைகளினூடாக வழங்கும் ஸ்ரீ சாயி கலைக்கழகத்தின் சேவைகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டு நற் சேவையாற்ற என் இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இந் நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி. சிவை குகநேசன் அவர்களுடைய ஆளுமையும் சேவையும் எமது மண்ணுக்குத் தொடர்ச்சியாகக் கிடைக்கவும் அவர் தம் குடும்பத்தினர் நீண்டகாலம் நல்வாழ்வு வாழவும் இறையருள் துணை நிற்பதாக.

**கலாநிதி. பா. தனபாலன்**
உபபீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
நிபுணத்துவ ஆலோசகர்,
சமய விழுமியப்பிரிவு,
கல்வியமைச்சு, பத்திரமுல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

தன் நிறைவுடன் தலைநிமிர்ந்து நிற்கும் ஸ்ரீ சாயி கலைக்கழகம் இவ் வருடம் தனது 25 வது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து வெள்ளிவிழாக் காணுகின்றது.இசை கேட்போரது மனதுக்கும், உணர்வுகளுக்கும் ஏற்ப அருந்மருந்தாக அமைகின்றது.அன்பு, ஆர்வம், பக்தி, வலி, ஏமாற்றம், திகைப்பு எல்லாவற்றுக்கும் இசையே மொழியாக அமைகின்றது.இத்தகைய இசையை மேன்மைப் படுத்த இக்கல்வி நிறுவனம் வளமுடன் வளர்ச்சியடைய அரும்பாடுபட்ட இந் நிறுவன இயக்குனரும், ஆசிரியர்களும், நலன்விரும்பிகளும் இத்தருணத்தில் நன்றியுடன் நினைவு கூறப்பட்ட வேண்டியவர்களாவர்.

சமூக நிறுவனமாக ஸ்ரீ சாயி கலைக்கல்லூரி நமது கலாசாரப் பண்பாடும் பாரம்பரியங்களைப் பேணி சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாண மண்ணிற்குப் பெருமை சேர்த்து வெள்ளிவிழாக்கண்டு மகிழ்கின்றது.

இசையுலகில் தனக்கென தனியிடத்தைப் பெற்று 2007 இல் " கலைக்குரிசில் " என்னும் பட்டம் பெற்ற கவிக்குயில் திருமதி.சிவை குகநேசன் நெறிப்படுத்தலில் உயர்ந்து நிற்கும் இக் கலைக்கல்லூரி மாணவர்கள் மாகாண மட்டம், தேசிய மட்டங்களில் நடைபெறும் இசைப்போட்டிகளில் பங்குபற்றிச் சாதனைகளைப் படைத்துள்ளனர்.

சமுதாயம் ஒன்றின் வளர்ச்சிக்கு இசை அடித்தளமாக அமைகின்றது. இசைக்கடலில் மூழ்கி கரை சேர்வதற்கான ஓடங்களாக அமைபவை இசைக்கல்லூரிகள் கால சமூக மாற்றங்களுக்கேற்ப புடம் போட்ட பொன்போலம் மிளிர்ந்து வரும் ஸ்ரீ சாயி கலைக்கல்லூரிச் சமூகத்தினரால் வெள்ளிவிழாவையொட்டி வெளியிடப்படும் " ஸ்ருதிலயம் " இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைவதோடு மேன்மேலும் பல சாதனைகள் படைத்து நிற்க மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.ஜெ.உதயகுமார்**
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் உரும்பிராயில் அமைந்து கலைகளை பயிற்றுவிக்கும் உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகத்தினரை, அவர்களின் பணிகளை, 25 வருடங்களாக செய்துவரும் அளப்பரிய கலைப்பணிகளை எண்ணி வியக்கிறேன்.அவர்களின் பணிகளை வாழ்த்துகிறேன்.25 வருடங்களாக வாய்ப்பாட்டு,ஓகன், வயலின், நடனம், தபேலா என பல நுண்கலைகளை பயிற்றுவித்து வருகின்றனர். இதன் காரணமாக பல மாணவர்கள் கல்வி சார்ந்தும் கலை சார்ந்தும் பயன் பெற்றுள்ளார்.பலர் சிறந்த கல்விமான்களாகவும் கலைஞர்களாகவும் மிளிர இது வாய்ப்பளித்துள்ளது.சுமார் 3000 த்திற்கு மேற்பட்ட மாணவர்கள் இக்கலை நிறுவனத்தினூடாக பயன் பெற்று வெளியேறியுள்ளனர்.

மேலும் இக் கலை நிறுவனம் பயிற்சிகளிலும், பயிற்றுதலிலும் மட்டும் நின்று விடாது மிருதங்க அரங்கேற்றங்களையும் ஆண்டுதோறும் ஆண்டு விழாவினையும் வாணி விழாவினையும் மிகவும்சிறப்பாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.அவ் விழாக்களில் மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டும் சம்பவங்கள் இடம் பெறுகின்றன.இதன் காரணமாக தமது ஆற்றல்கள், திறமைகள் என்பன வெளிப்படுத்தப்படுகின்றன.

இத்தகைய பயில்வுகள் நடைபெறும் போது பிரதேச, மாவட்ட, மாகாண தேசிய போட்டிகளில் கலந்துகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தவும் வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.அவர்கள் அதற்கான சிறந்த பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்கின்றனர்.க.பொ.த சாதாரணம், க.பொ.த உயர்தரம் மற்றும் வட இலங்கை சங்கீத சபைக்குரிய பரீட்சைகளுக்கும் மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு பரீட்சைக்கு தயார்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.கலை ரீதியான அறிமுறை சார்ந்தும், செய்முறை சார்ந்தும் பயிற்றுவிக்கும் முறை மிகவும் பிரயோசனமானது.

இத்தகைய நிறுவனம் வெள்ளிவிழாக் காணுவது அதன் பேறே ஆகும்.இன்றைய விழா சிறக்கவும் இந்த மலர் சிறக்கவும் வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இந் நிறுவனத்தின் இயக்குனர் திருமதி.சிவை குகநேசன் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்.இவர் மாணவர்களுக்கு சிறந்த கல்வி மற்றும் கலையைப் போதிப்பவர்.மிகவும் இறுக்கமான முறையில் இந் நிறுவனத்தை நிர்வகித்து வருகிறார்.அவரது முயற்சிக்கும் நேர்மைக்கும் வழிகாட்டலுக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.க.திலகநாதன்**
நாடகத்துறை விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.
இயக்குனர்,
ஆடுகளம் ஆற்றுகைக் குழு,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகத்தின் வளர்ச்சி பாதையிலே ............

1993ம் ஆண்டு மாசி மாதம் இரண்டாம் திகதி இரு மாணவிகளின் (வசந்தா, ஜெயப்பிரதா) வேண்டுகோளுக்கிணங்க எனது வீட்டினில் இசைப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.இந்த ஆண்டினிலேயே விஜயதசமி தினத்தன்று உரும்பிராய் சந்ததியிலுள்ள நில அளவையாளர் திரு.அ.கமலசேகரம் அவர்களது இல்லத்தில் அவர் புத்திரிகளான சோபனா, மோகனா ஆகிய மாணவிகளுக்கு நான் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.அன்றைய தினம் சூராவத்தை சுன்னாகத்தில் உள்ள சிவபாதம் மாஸ்டர் வீட்டினில் மகன்,மருமக்கள்,பெறாமக்கள் என்ற உறவுகளாக 26 மாணவர்களை இணைத்து மாலை 6.00 மணியளவில் நான் வகுப்பு இடம்பெற்றது.இந்த 26 மாணவர்களுக்குகான வகுப்பிற்கு வசந்தா,ஜெயப்பிரதா ஆகிய எனது இரு மாணவிகளின் வேண்டுகோளும், சிவபாதம் மாஸ்டரின் வேண்டுகோளும் காரணமாக அமைந்தது.சிவபாதம் சிவஸ்ரீ என்பவர் முதலாவது ஆண் மாணவர் ஆவார்.

உரும்பிராய் சந்தியிலுள்ள நில அளவையாளர் இல்லத்தில் இரு மாணவிகளுக்கு கற்பித்துக் கொண்டிருக்கும் வேளையில் பல பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க விஜயதசமிக்கு அடுத்த வாரமே 24 மாணவர்கள் இணைக்கப்பட்டனர்.இவ் வளர்ச்சியின் ஆரம்பமே நிறுவனமானது.

1995ம் ஆண்டு சித்திரை மாதம் இடம்பெற்ற வட இலங்கை சங்கீதசபையின் பரீட்சையில் 41 மாணவர்கள் நல்ல பெறுபேற்றினைப் பெற்றனர்.இந் நிலையில் ஐப்பசி மாதம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வலிகாமத்தினை விட்டு தென்மராட்சிக்கு இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.அப்பொழுதும் மீசாலையிலுள்ள எனது கணவரின் வீட்டினில் மாணவர்கள், பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க வகுப்புக்கள் இடம்பெற்றன. க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு பயிற்சி அளிக்கப்பட்டு பரீட்சைக்குத் தோற்ற இரு மாணவர்களுக்கு உதவி அளிக்கப்பட்டது.இன்று அந்த இரு மாணவர்களும் நல்ல நிலையில் உள்ளனர்.

1996ம் ஆண்டு சித்திரை மாதம் மீண்டும் வலிகாமம் நோக்கித் திரும்பினோம் இருந்தபோதும் அசாதாரண சூழ்நிலை காரணமாக உடனடியாக வகுப்புக்கள் ஆரம்பிக்க முடியவில்லை.மீண்டும் இந்த ஆண்டின் விஜயதசமி தினத்தன்று வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டது. 1997ம் ஆண்டு உரும்பிராய் கிழக்கு அரசவீதியிலுள்ள வீட்டிற்கு மாற்றலாகினோம்.இதுவரை காலமும் வாய்ப்பாட்டுடன் மட்டுமே நடைபெற்று வந்த வகுப்பு மிருதங்கம்,வயலின்,ஓர்கன்,நடனம் என பல துறைகளாக வியாபித்து கலாபூசணம் க.ப.சின்னராசா அவர்கள் மிருதங்க இசையினையும், திரு.த.சற்குருநாதன் அவர்கள் வயலின் இசையினையும், திரு.எஸ்.செல்வச்சந்திரன் அவர்கள் ஓர்கன் இசையினையும், திருமதி.ப.சுரேஷினி அவர்கள் நடனத்தையும் பயிற்றுவித்தனர்.எல்லா துறைகளிலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை எழுபத்தாறாக உயர்ச்சியடைந்தது.

1998ம் ஆண்டு உரும்பிராய் வைரவர் ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு கலைநிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து தருமாறு என்னிடம் காலஞ்சென்ற சமாதான நீதிவானும் ஓய்வுநிலை கிராம சேவையாளருமாகிய கிருஷ்ணராஜா அவர்கள் கேட்டுக் கொண்டார்.அவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையிலே சிவராத்திரி நிகழ்ச்சிகளை அறிவிப்பதற்காக இந் நிறுவனத்திற்கு பெயர் சூட்ட வேண்டும் என்ற நிலை உருவானது.இந் நிலையில் மதிப்பிற்குரிய கிருஷ்ணராஜா அவர்களால் " ஸ்ரீ சாயி கலைக்கழகம் " என்னும் பெயர் எமது நிறுவனத்திற்கு சூட்டப்பட்டது.இவ்வாறு எமது நிறுவனமானது ஐந்து துறைகளில் வளர்ச்சி பெற்றது.

எமது நிறுவனத்தினால் பல நிகழ்ச்சிகளை ஆலயங்கள்,பிரதேச செயலகத்தின் கலாசார நிகழ்ச்சிகள் போன்றவற்றுக்கு வழங்கி வருகின்றோம்.2000ம் ஆண்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக வகுப்புக்கள் அனைத்தும் குறுகிய காலம் இடைநிறுத்தப்பட்டது மீண்டும் அதே ஆண்டு விஜயதசமி தினத்தன்று அனைத்து வகுப்புக்களும் ஆரம்பமாகின.இதுவரை கற்பித்த மிருதங்க ஆசிரியர், வயலின் ஆசிரியர்களின் உடல்நிலை காரணமாக ( இவ் ஆண்டிலிருந்து) திரு.பத்மநாதன் ஆசிரியர் அவர்களும் (வயலின்) திரு.மாதவன் அவர்களும் (மிருதங்கம்) கற்பித்தார்கள் தொடர்ந்து கலை நிகழ்வுகளில் பங்கு பற்றதலும், போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டலும், வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளில் திறமைச் சித்தி பெறுதலும் இடம்பெற்ற வண்ணம் இருந்தது.

2001ம் ஆண்டு திரு.ரதீஸ் அவர்கள் வயலின் இசையைக் கற்க ஆரம்பித்தார். 2005ம் ஆண்டு திரு.ரதீஸ் அவர்கள் நிரந்தர நியமனம் கிடைத்து வெளிமாவட்டம் செல்ல திரு.ரமேஸ் அவர்கள் வயலினிசையைக் கற்பித்தார்.

2006ம் ஆண்டு மே மாதம் இந் நிறுவனமானது உரும்பிராய் வடக்கில் உள்ள பணிப்பாளரின் தற்காலிக வீட்டிற்கு இடம்பெயர்ந்தது.அந் நேரத்தில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வகுப்புக்கள் மீண்டும் இடைநிறுத்தப்பட்டன.அனைத்துப் பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் விஜயதசமி தினத்தினில் ஆரம்பிக்கப்பட்டது.நடன ஆசிரியர் வெளிநாடு சென்றமையால் நடன வகுப்புக்கள் நிறுத்தப்பட்டன.

2007ம் ஆண்டில் பல மாணவர்கள் வாய்ப்பாட்டு,வயலின்,மிருதங்கம்,ஓர்கன், என்னும் துறைகளில் இணைந்து கொண்டனர்.

இவ்வேளையில் ஓர்கன் இசையினை திரு.ஜோன்ஸ் கவாஸ்கன் அவர்களால் கற்பிக்கப்பட்டது.அவரைத் தொடர்ந்து திரு.சுதன்ராஜ் அவர்கள் ஓர்கன் இசையைக் கற்பித்தார்.இவ் வருடத்தில் வயாவிளான் மத்திய கல்லூரியின் ஓய்வுநிலை அதிபரும், தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் முகாமையாளருமான காலஞ்சென்ற ஆ.சி.நடராஜா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க புன்னாலைக் கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் மீது பாடப்பட்ட 10 பக்திப் பாடல்கள் அடங்கிய இறுவட்டும், சிறுவர் சிந்தனைக் கவிதைகள் என்ற பத்துப் பாடல்கள் அடங்கிய இறுவட்டும் பணிப்பாளரால் பாடப்பட்டு, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் தினக்குரலின் அனுசரணையுடன் உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகத்தின் வெளியீடாக அமைந்தது.இந் நிகழ்வன்று இச் சிறுவர் சிந்தனைப் பாடல்களுக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்த ஆரம்பக்கல்வி, விசேடகல்வி ஆகிய துறைகளைச் சார்ந்த மாணவர்களின் அபிநய ஆற்றுகைகளும் அதற்குப் பொருத்தமான ஓவியங்கள் மண்டபத்தை நிறைத்தும் காட்சிப்படுத்தப்பட்டன. அபிநயமும், ஓவியமும் போட்டியாக நடத்தப்பட்டன. பார்வையாளர்களின் நடுவே ஆங்காங்கே நடுவர்கள் இருந்து மதிப்பீடு செய்தனர்.இந் நிகழ்வு எனக்கு நல்ல அடித்தளம் இட்டது என்றே கூறவேண்டும்.ஏனெனில் பாடுவது மட்டும் தான் கலை அல்ல இதற்கு பொருத்தமான அபிநயங்களையும் ஓவியங்களையும் கொண்டு வரவேண்டும் என்பதும் இந் நிகழ்வினை எப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கமைத்து செய்ய வேண்டும் என்பதையும் எல்லாக் கலைகளும் இணையும் போது தான் நிறைவினைத் தரும் என்பதையும் கற்றுக் கொண்டேன்.

இறுவட்டுக்களில் பாடியமைக்காக “கலைக்குரிசில்” என்னும் விருதினையும் தந்து இலை மறைகாயாக இருந்த எமது நிறுவனத்தை சமூகத்திற்கு வெளிக் கொணர்ந்தவர் எனது மானசீகமான குரு மதிப்பார்ந்த ஆ.சி.நடராஜா அவர்களே.

2008ம் ஆண்டு மிருதங்க ஆசிரியர் மேற்படிப்புக்காக இந்தியா சென்றமையால் திரு.கிருபா அனந்தகோபன் அவர்கள் எமது நிறுவனத்துடன் ஆசிரியராக இணைந்து கொண்டனர்.வயலின் ஆசிரியராக திருமதி மங்கயலக்ஷமி வர்ணகுலசிங்கம் இணைந்து கொண்டார்.இவ்வாண்டிலேயே முதன்முதலாக நிறுவனவளாகத்தில் வாணிவிழா விமர்சையாக நடத்தப்பட்டது.

2009ம் ஆண்டு வழமையான செயற்பாடுகளுடன் வாணிவிழாவும் ஆண்டுவிழாவும் அனைவரின் வேண்டுகோளுக்கு இணங்க மகிவும் சிறப்பாக உரும்பிராய் காமாட்சியம்மன் கல்யாண மண்டபத்தில் இடம்பெற்றது.இவ் வேளையில் தான் திருமதி பவித்திரா என்னும் நடனஆசிரியரின் மோகினி ஆட்ட ஆற்றுகையும் இடம்பெற்றது.அடுத்தநாள் விஜயதசமியன்று நடன நாள் வகுப்பும் இடம்பெற்றது.பின்னர் நடனக்கலையை பவித்திரா ஆசிரியைத் தொடர்ந்து சிறிது காலம் திருமதி சத்தியப்பிரியா அவர்கள் கற்பித்தார்.16 மாணவர்கள் இணைந்து கொண்டனர்.

2010ம் ஆண்டு எமது நிறுவனத்தின் மிருதங்க ஆசான் திரு.கிருபா அனந்தகோபன் அவர்களால் மிருதங்க அரங்கேற்றம் செய்யப்பட்டது.செல்வன் ஸ்ரீதரன் டிலுக்சன் க.பொ.த சாதாரணம் படித்துக் கொண்டிருக்கும் அதேவேளை குருவினதும் மாணவனதும் அயராத உழைப்பினால் மிகவும் சிறப்பாக அரங்கேற்றமானது இடம்பெற்றது.எமது நிறுவனத்தின் படைப்பாற்றல் திறன்களும் வெளிக்கொணரப்பட்டது.

செல்வி.வருணியா தில்லைநாதன் என்னும் மாணவியை அவரது தாயார் தரம் 03 னைக் கற்கும் போது பண்ணிசைப் போட்டிக்கான பயிற்சிக்காக எம்முடன் இணைத்துக் கொண்டார். இம் மாணவிக்கான திறன்கள் பல வாய்ப்பாட்டு,பண்ணிசை,வயலினிசை என்பனவற்றில் மிகவும் திறமை வாய்ந்தவர்.சைவ பரிபாலனசபைப் பண்ணிசைப் போட்டி, இணுவில் பரராஜ சேகர மகோற்சவத்தை ஒட்டிய பண்ணிசைப்போட்டி, யாழ் வலயத்தால் நடாத்தப்படும், ஆலயங்கள் தோறும் நடாத்தப்படும் பண்ணிசைப் போட்டிகளில் எல்லாம் அவர் தோற்றும் பிரிவுகளிளெல்லாம் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கங்களையும், சிறப்புப் பரிசில்களையும் பெற்றுக் கொண்டார்.அத்துடன் அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியினில் தனிஇசையில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டனர்.க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 2A C என்னும் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றும் நான் நுண்கலைத் துறையினையே கற்கப் போகின்றேன் என சுயமாக முடிவெடுத்து முதலாம் வருடத்தில் வாய்ப்பாட்டினை பிரதான பாடமாக எடுத்து கற்றுவருகின்றார்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சாஸ்திர, கிராமிய இசைப்போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

செல்வி யதுசா ரகுநாதன் 2002ம் ஆண்டு வாணிவிழாவின் போது தனது இரு சகோதரர்களுடன் மூன்று வயதில் இணைந்து கொண்டார்.இவர் சிறுவயதிலேயே ஆக்கத்திறன் கொண்டவராகக் காணப்பட்டார்.இவர் வாய்ப்பாட்டு,வயலின் ஆகிய பாடங்களில் தரம் நான்கினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிவிசேட சித்தியைப் பெற்றுக் கொண்டவர்.அத்துடன் பண்ணிசை போட்டிகளிலும் முதலாம் இடத்தினைப் பெற்று தங்கப் பதங்கங்களைப் பெற்றுக் கொண்டவர்.அத்துடன் அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் பாவோதலில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.ஓர்கன் வாத்தியத்தினை அனுபவம் வாய்ந்த கலைஞர்களைப் போல் கையாளத் தக்கவர்.க.பொ.த உயர்தரத்தில் ஆங்கில மொழி மூல விஞ்ஞானப் பிரிவில் கற்கைநெறியை மேற்கொண்டமையால் கடந்த கால மூன்று வருடகால இடைவெளிக்குப் பின்பு மீண்டும் எம்முடன் இணைந்து கொண்டார்.

செல்வி யஜீவா சத்தியசீலன் 2007ம் ஆண்டு எமது நிறுவனத்தில் இணைந்து கொண்டார்.இவர் சிறுவயது முதலே பல நிகழ்வுகளிலும் பல போட்டிகளிலும் பங்குபற்றி அனைவரின் பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றுக் கொண்டவார்.அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் தனி இசையில் இரண்டாம் இடத்தினையும் தமிழ்ச்சங்கத்தின் பவளவிழாவை ஒட்டி நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியாக தனிஇசைப் போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்று தங்கப்பதக்கங்களையும் பெற்றுக் கொண்டவர்.இவ்வருடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் முதலாம் வருட கற்கைநெறியை மேற்கொள்கின்றார்.

செல்வன் ஆனந்தஜோதி வித்தியாசாகர் முன்பள்ளிப் பருவத்தில் எமது நிறுவனத்துடன் இணைந்து கொண்டவர்.இவர் அகில இலங்கை ரீதியான தமிழ்த்தினப் போட்டி தமிழ் வாசிப்பில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டவர்.ஓர்கன் இசையில் கைதேர்ந்தவர்.முதலாம் தரப் பரீட்சையில் 83 புள்ளிகளைப் பெற்று திறமைச்சித்தியெய்தி எமது நிறுவனத்திற்கு பெருமை பெற்றுத் தந்தவர்.இவர் வாய்ப்பாட்டு இசை,பண்ணிசை,பேச்சு,கட்டுரை என்பவற்றில் பல வெற்றிகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

செல்வி ஹரினி ஹரிவண்ணன் என்னும் மாணவி தரம் 05 இல் எமது நிறுவனத்துடன் இணைந்து கொண்டவர்.இவர் அகில இலங்கை ரீதியான தமிழ்த்தினப் போட்டியில் தனிஇசையில் இரண்டாம் இடத்தினைப் பெற்று பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டவர்.இவர் வாய்ப்பாட்டிசை,பண்ணிசை,ஓர்கன் இசை என்பனவற்றில் தேர்ச்சி பெற்றவர்.

எமது நிறுவனத்தில் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு விஜயபாஸ்கரன், நிலானி,சர்விகா,சி.மதியா, எஸ்.கம்சிகா,யசோதா,பகிர்த்தனா,சிந்துஜா,சுவேதினி,சுயேணி,பரிங்டன் ஆகியோரும் யாழ்ப்பாணப் பல்கலைக்ககழக நுண்கலைப் பீடத்திற்கு ஸ்ரீ.கலையரசி,கோகுலராம், லொறேசியா, கஜீபா,விதுப்பிரியா,தாட்ஷாயினி,அகல்யா,வர்மிளா,நிஜாந்தி,பானு, விஷாலி, சுசீதா,தட்ஷாயினி,நிரோசா, தர்ஷிகா,நவனீதா,டொன்சியா,கீர்த்திகா, நிருஜா,கீர்த்தனா, கஜானா ஆகியோரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வசந்தகுமாரி,சுவிதா,அருளினி,பிரபு, தேன்மொழி, துவாரகா, சர்மினி, பாசினி,வசந்தரூபி ஆகியோரும் ஆண்டு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

2011ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை திருமதி ஜெயரஞ்சினி குயின்டஸ் அவர்கள் நடனக் கலையை கற்பித்துவருகின்றார்.2016ம் ஆண்டு தைப்பூசத்தன்று தொடக்கம் இன்றுவரை இசைவாணர் கண்ணன் அவர்கள் ஓர்கன் கற்பித்துவருகிறார்.இவ்வாறாக 2011ம் ஆண்டிலிருந்து 2017ம் ஆண்டுவரை, அயலில் உள்ள ஆலயங்களில் பக்தி இசை நிகழ்ச்சிகளையும் பிரதேச செயலகங்களில் நடாத்தப்பட்ட கலாசார விழாக்களில் இசை,நடன நிகழ்ச்சிகளையும் ஆற்றுகை செய்து பலதரப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி சிறந்த வெற்றிகளையும் ஈட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடந்தோறும் நடத்தப்படும் ஆண்டு விழா,வாணி விழாவினையும் சிறப்புற நடத்தி எல்லோரது பாராட்டுக்களையும் தன்வசப்படுத்திக் கொண்டது.

2018ம் ஆண்டு மாசிமாதம் 17ம் திகதி எமது மிருதங்க ஆசான் திரு.கிருபா அனந்தகோபன் அவர்களின் மாணவன் எமது கலைச்செல்வன் முரளிதரன் சுலக்ஷன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் உரும்பிராய் இந்துக் கல்லூரி கற்பக விநாயகர் கலையரங்கில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.எமது செல்வனது இடதுகை வாசிப்புத்திறன் அனுபவம் வாய்ந்த கலைஞரைப் போல் அமைந்தமை அனைவரையும் வியக்க வைத்தது.இவர் இந்நிறுவனத்தில் 2007ம் ஆண்டு முதல் இன்றுவரை வாய்ப்பாட்டு இசையினையும் பண்ணிசையினையும் 2008ம் ஆண்டு முதல் மிருதங்க இசையினையும் கற்று இன்று மிருதங்க அரங்கேற்றத்ததையும் கண்டுள்ளார். அத்துடன் இசைநாடகம்,நாடகம்,கூத்து,வில்லுப்பாட்டு, நடனம் போன்ற துறைகளில் பாடசாலையிலும் எமது நிறுவன அரங்குகளிலும் மிகச் சிறந்த இளங்கலைஞராக நிகழ்கின்றார்.

2018 விஜயதசமி அன்றிலிருந்து தபேலா இசை வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. தபேலா ஆசிரியராக ம.கெங்காதரன் அவர்கள் இணைந்து கொண்டார்.இவ்வாறு எமது நிறுவனமானது இன்று 25 ஆவது வருடத்தில் வெள்ளி விழாவை கொண்டாட முற்படும் வேளையில் தேசிய இளைஞர் விவகார அமைச்சினால் நடாத்தப்பட்ட சாஸ்திரிய இசை, கிராமிய இசை, மிருதங்க இசை, வயலின்இசை, ஓர்கன் இசை என்ற துறைகளில் மாவட்ட, மாகாண மட்டங்களில் முதலாம் இடத்தினைப் பெற்று தேசிய மட்ட போட்டிகளிலும் பங்குபற்றினார்கள். தேசிய மட்ட மிருதங்க இசையில் எமது நிறுவன இசை மாணவன் செல்வன் முரளிதரன் சுலக்சன் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளமை உத்தியோகப் பூர்வமாக அறியப் பெற்றுள்ளோம். இவருக்கான பரிசளிப்பு நிகழ்வு 28.10.2018 அன்று கொழும்பு தாமரைத் தடாகத்தில் நடைபெறவுள்ளது.ஏனைய துறைகளுக்கான முடிவுகள் இதுவரை உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

வெள்ளிவிழா காணும் இவ்வேளையில் எமது இசைச் செல்வன் அரங்கேற்கண்ட இவ் வருடத்திலேயே தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமை காலத்தால் மறக்க முடியாத ஆற்றுகை என்பதைக் கூறிக்கொள்வதில் எமது நிறுவனம் பெருமிதமடைகிறது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலைகள், இயற்கை அனர்த்தங்களின் காரணமாக எமது நிறுவனமானது பல இடப்பெயர்களையும் இன்னல்களையும் அனுபவித்த போதிலும் அயராது நூற்றிப் பதினாறு ( 116 ) மாணவர்களுடன் தனது கலைச் சேவையை ஆற்றி வெள்ளிவிழா காண்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திறுவனப் பணிப்பாளர்**
**திருமதி சிவை குகநேசன்**



**திறுவனப் போசகரும் பணிப்பாளரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய குழாம்



வாய்ப்பாட்டு
திருமதி சிவை குகநேசன்



மிருதங்கம்
திரு.கிருபா அனந்தகோபன்



ஓர்கன்
திரு.முத்துக்குமாரு
கோபால கிருஷ்ணன்



வயலின்
திருமதி மங்கயலக்ஷமி
வர்ணகுலசிங்கம்



நடனம்
திருமதி.ஜெயரஞ்சினி குயின்டஸ்



தபேலா
திரு.மகேந்திரன் கெங்காதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சாயி கலைக்கழகத்தின் கல்வி பயிலும் துறை சார்ந்த
மாணவர்கள் ஆசிரியர்களுடன்



வாய்ப்பாட்டு பயிலும் மாணவர்கள் ( சிறியவர்கள் )



வாய்ப்பாட்டு பயிலும் மாணவர்கள் ( பெரியவர்கள் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சாயி கலைக்கழகத்தின் கல்வி பயிலும் துறை சார்ந்த
மாணவர்கள் ஆசிரியர்களுடன்



வயலின் பயிலும் மாணவர்கள்



மிருதங்கம் பயிலும் மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சாயி கலைக்கழகத்தின் கல்வி பயிலும் துறை சார்ந்த
மாணவர்கள் ஆசிரியர்களுடன்



ஓர்கன் பயிலும் மாணவர்கள்



நடனம் பயிலும் மாணவர்கள்



தபேலா பயிலும் மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வியல் இசை

## அறிமுகம்

மனித வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து அக்காலச் சமூகப் பண்பாட்டுப் பாரம்பரியங்களை கலைகள் எடுத்தியம்புகின்றன.மனித தோற்றத்தோடு ஆரம்பித்த கலைகள் அவனது அறிவியல், விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியோடு வளரலாயின.கலை மக்களின் வாழ்வியலை, பண்பாட்டினை, நாகரித்தினை எடுத்தியம்பும் கண்ணாடி, சமூக நீதிகளை, அறத்தத்துவங்களைத் தெளிவாகப் படம் பிடித்துக்காட்டி கலையைப் போன்ற சாதனம் எதுவுமில்லை" என டி.வி.நாராயணசாமி குறிப்பிடுகின்றார்.சிந்தனை முகிழ்ப்பில் தோன்றிப் படைப்புத் திறனால் உருப்பெற்று இன்ப உணர்வுக்குக் காரணமாகி அழகுத் தன்மையுடன் விளங்குவது கலையாகும் என எ.என்.பெருமாள் குறிப்பிடுவது கலையின் முக்கியத்துவத்தினைப் பறைசாற்றி நிற்கின்றது.

இன்பத்தின் ஊற்றாகி, மகிழ்ச்சியில் மாட்சிமையுடன், அழகின் பிறப்பிடமாய், பண்பாட்டின் கொடிமுடியாய், ஆனந்தத்தின் உறைவிடமாய் நாகரிகத்தின் ஒளிவிளக்காய் நாமெல்லாம் நலமுடன் வாழ பொலிவுற்று விளங்குவதாகக் கூறப்படும் கலைகளில் செவிக்கு விருந்தளிக்கும் கலையே இக் கலையாகும்.

## இசையும் வாழ்வும்

இசையும் தாளமும் அன்று முதல் இன்றுவரை மனித வாழ்வியலுடன் இரண்டறக் கலந்துள்ளன.உலக கலாசாரங்கள் அனைத்திலும் இசைக்குத் தனியிடம் உண்டு.இசையால் வசமாகா இதயமில்லை.இசை மனிதனின் ஆன்மா,மனம், உடல் ஆகியவற்றுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டிருக்கின்றது.இசையால் கோபம்,வீரம்,சோகம்,நம்பிக்கை,காதல்,நகைச்சுவை போன்ற உணர்வுகளை உருவாக்க முடிகின்றது.

நம்மை அறியாமலே நல்ல இசை நம்மை வசப்படுத்துகின்றது.மனச்சோர்வு, உடற்சோர்வு ஏற்பட்டு உற்சாகம் குன்ற இருக்கும் போது கேட்கப்படும் இனிய இசை மனதில் சோர்வினைப் போக்கி உற்சாகத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது.மென்மையான இசை மனதுக்கு ஆறுதலையும், அமைதியையும் தருகின்றது.இசைக்கு வசப்படுவர் வாழ்வு அர்த்தமுள்ளதாகவும், ஆனந்தம் நிறைந்த ஆன்மிக வாழ்வாகவும் மாறும்.இசையுடன் இணைந்த ஆன்மிக சிந்தனைகள் மனக்கட்டுபாட்டைத் தரவல்லன.

இன்றைய அவசரயுகத்தில் மனதை ஒரு நிலைப்படுத்த தியானம் இன்றியமையாதது.இத் தியானத்திலும் இசைக்கு தனி இடமுண்டு.கண்ணனின் குழலோசையில் பறவைகள், பசுக்கள் கட்டுண்டு கிடந்தாக திவ்வியப் பிரபந்தம் கூறுகின்றது.நாம் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் மேற்கூறப்பட்ட இரண்டும் தேவை.எனவே இசை எமது மனத்தை ஈர்த்து தன்னோடு எம்மை ஐக்கியப்படுகின்றது.

ஒருவர் தன் எண்ணங்களை சிந்தனைகளை மனதில் படுகின்ற பொருட்களை அழகாக எழுத்தில் வடிக்கின்றார்.அவற்றிற்கு இசை அமைத்துப்பாடும் போது ஏற்படும் மன உணர்வும், ஆர்வமும் தனிரகம் அழகியல் உணர்வை மனிதரிடமிருந்து பிரித்துவிட்டால் மனிதனிடம் எஞ்சுவது காட்டுமிராண்டித்தனமே.மனிதன் மனிதனாக மனிதப்பண்புடன் வாழ இசை உதவுகின்றது.இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன யுகத்திலே மனிதன் மூளையை இயந்திரங்களிடம் ஒப்படைத்துவிட்டு மிருகமாக மாறிக் கொண்டிருகிக்கின்றான் என்று சமூக விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.எனவே மனிதன் மிருகமாக மாறாமல் இருக்க இசை உதவுகின்றது.

இசை என்பது ஒழுங்கு செய்யப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட அழகு ஓவியமாகும்.இசை என்ற சொல்லிற்கு இசைய வைப்பதென்று பொருள்.எனவே மனிதனையும் ஏனைய உயிரினங்களையும் இசைய வைக்கின்ற, இணங்க வைக்கின்ற, பணியவைக்கின்ற ஓர் அருஞ்சாதனம் எல்லோருக்கும் புரிகின்ற மொழியே இசையாகும்.சிறுவர் நுண்ணறியவு எனப்படும் Intelligence Quotient (IQ) அதிகரிப்பதற்கு இசை முக்கிய பங்கினை வகிக்கின்றது என்பதை உணர்ந்த இன்றைய பெற்றோரில் பலர் தமது குழந்தைகளுக்குச் சிறுவயது முதலே சங்கீதம், பியானோ, வீணை, மிருதங்கம், வயலின், ஓர்கன் போன்ற ஓர் இசைக்கருவியைக் கற்றுக் கொடுப்பதில் ஆர்வங்காட்டுவதைக் காணமுடிகின்றது.

மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு அசைவிலும் பாடல்கள் ஆழமாக வேரூன்றிக் காணப்படுகின்றன.குழந்தை பிறக்கும் போது மருத்துவிச்சி வாழ்த்துப்பாடுகின்றாள்.பின்பு தூங்க வைப்பதற்காக தாயானவள் தாலாட்டுப் பாடுகின்றாள். பாலூட்டும் போது, உணவூட்டும் போது பாடுகின்றாள்.மனிதன் பிள்ளை, சிறுவர்களோடு விளையாடும் போது விளையாட்டுப் பாடல்களையும், வேடிக்கைப் பாடல்களையும் பாடுகின்றாள். கட்டிளைமைப்பருவத்தில் காதற்பாடல்களைப் பாடுகின்றான்.தொழில் புரியும் போது "ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது" என்பதற்கிணங்க தொழிற்பாடல்களைக் பாடி அலுப்பைப் போக்கிக் கொள்கின்றான். இறைவழிபாட்டிலும் பண்டிகைகள், விழாக்களின் போது பாடுகின்றான். இறக்கும் போது சுற்றத்தார் இசையோடு பாடும் ஒப்பாரியாகவும் இசை வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் இரண்டறக் கலந்துள்ளது.

## பழந்தமிழ் நூல்களும் இசையும்

பழந்தமிழ் மக்கள் இயற்கையில் ஆராய்ந்து இனிமையான ஓர் இசை முறையை உருவாக்கினர்.இவர்கள் இசைப் புலமையும் இசை இலக்கண அறிவும் பெற்றிருந்தனர்.சங்கத் தமிழானது இயல், இசை, நாடகம் என மூன்று வகைப்படும்.பண்டைத் தமிழரிடையே இசையும் அதனோடு இணைந்த கூத்தும் உருவாகி வளர்ந்தன.சங்க நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பனவற்றோடு தொல்காப்பியம் ஆகிய நூல்களிலும் பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்திலும் தமிழிசை பற்றிய பல செய்திகள் கூறப்பட்டுள்ளன.

" யாழும் குழலும் சீறும்மிடறும்
தாழ்குழல் தண்ணுமை ஆடலொடு
இவற்றின் இசைந்த பாடல் இசையாகும்"

என இளங்கோவடிகள் அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.எல்லோருக்கும் புரியும் பாசையும் இயற்கையின் ஒசையும் சங்கீதம் என்றார்.நம் முன்னோர்கள் கலைகளை அறுபத்து நான்கு என வகுத்துள்ளனர். இந்தக் கலைகளை வாத்சாயனர்.

01. லலித கலைகள்
02. லௌகிகக் கலைகள் என இரண்டாகப் பாகுபடுத்தியுள்ளார்.

இதனையே "ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய .........." என்று சரஸ்வதி தாயை நோக்கி கம்பர் பாடியுள்ளார்.கி.பி 6ம் நூற்றாண்டு தொடாக்கம் 10ம் நூற்றாண்டு வரையான இந்து மறுமலர்ச்சிக் காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் பழந்தமிழிற்குப் புத்துயிரளித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை இசைவடிவாகக் கண்டு மகிழ்ந்தனர். "ஓசை ஒளியெல்லாம் ஆனாய் நீயே", "ஏழிசையாய் இசைப்பயனாய்......", "இசைவடிவாய் நின்ற நாயகியே", "சலம்பூவொடு தூப மறந்தறியேன் தமிழோடிசைபாட மறந்தறியேன்" என்றெல்லாம் நெஞ்சுருக பாடிய கலை இசைக் கலையேயாகும்.இவ்விசை தொட்டிலில் தாலாட்டிசையாகவும், இளமையில் வாலிபத்தை வசப்படுத்தும் இசையாகவும், திருமணத்தில் மங்கள இசையாகவும், மரணத்தில் ஒப்பாரியாகவும் பண்டைத் தமிழர் வாழ்வியலைப் படம்பிடித்துக்காட்டி நிற்கின்றன.

## இசையும் மருத்துவமும்

இசை என்பது உளவியல் ரீதியாக மனிதனை ஆற்றுப்படுத்தும் அருங்கலையாகும். மனநலப் பிரச்சினைகளை குணமாக்க இசைச் சிகிட்சையை பயன்படுத்துகின்றனர்.இன்றைய நவீன தகவல் தொழில்நுட்ப யுகத்தில் கூட ஆட்டிஸம், A.D.H.D ஸ்கியோஃப்ரெனியா, பதற்றம், மனச்சோர்வு போன்ற நோய்களைக் குணப்படுத்துகின்றது.இசை ஆழ்மனதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரக்கூடிய வல்லமை பெற்றது.சற்குரு தியாகராசா சுவாமிகள் சரபோஜி மகாராசாவின் வயிற்றுவலியைக் கீர்த்தனை பாடி குணப்படுத்தியதாக வரலாறுண்டு.இதனால் தான் "பழிபாவமும், தன்னலமும், நிறைந்த உலகைவிட்டு எம்மை அப்பால் அழைத்துச் செல்ல வல்லது" என கவி இரவீந்திரநாத் தாகூர் குறிப்பிடுகின்றார்.

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்ததும் எராளமானோர் போர் தொடர்பான உடல் மற்றும் மன அழுத்தத்தைக் கொண்டிருந்தார்கள்.அந்நாட்டு இசைக்கலைஞர்கள் மருத்துவமனைகளிற்குச் சென்று ஆற்றுப்படுத்தியதாக அறியமுடிகின்றது.கவலையை இசைச் சிகிச்சை மூலம் மாற்ற முடியும் இம் முறை மூலம் நாட்பட்ட நோய்கள்,நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதாக மருத்துவத் துறையினர் நிரூபித்துள்ளனர்.மனதை இசையச் செய்யும் இசையான ஆனந்த பைரவி நோயைத் தீர்க்கும் இராகமாகவும் உள்ளது.உயர் இரத்த அழுத்தம் குணமாகின்றது.அத்துடன் மன அழுத்தம் கூடிய வேலைகளான போர் விமானம் செலுத்துபவர்கள், சத்திர சிகிச்சையைச் செய்வதற்கு முன்னர் வைத்தியர், நோயாளி இருவருமே ஆனந்த பைரவி இராகம் கேட்டால் மனதில் அமைதி நிலவுகின்றது.

பைரவி இராகம் மூளைச்சிதறல் எனப்படும் மனவளர்ச்சி குன்றியவர்களிடம் காணப்படும் வெறியை அடக்கும் சக்தி வாய்ந்தது.இந்த இராகம் மனதைப் பற்றற்ற நிலைக்குக் கொண்டு செல்லும் ஆன்மிகத்தின் பால் இட்டுச் செல்லும் சக்தி வாய்ந்த இந்த இராகத்தில் தான் ரிஷிகளும், முனிவர்களும் மந்திரம் ஓதினார்கள்.

நிறைவாக இசை இயற்கையின் வடிவம்.இயற்கையின் பிரதிபலிப்பே இசையில் ஏற்படும் லயம்,தாளம், காலப்பிரமாணம், ஆழம் யாவும் இயற்கையில் இருந்தே துவங்கின. கடலலைகளின் ஓசை, மரத்தில் துளை போடும் மரங்கொத்தியின் அலகின் ஓசை, மழைத்துளிகளின் ஓசை, மூங்கில் காற்றும் மோதும் இசை இந்த இசைக்கு மனிதன் தனது புத்திக் கூர்மையால் ஒரு கலையாக உருவம் கொடுத்தான்.ஓசை ஒளியெல்லாம் ஆகி நிற்பவன் இறைவன். ஏழிசையாய் இசைப்பயனாய் இருப்பவனும் இறைவனே.எனவே இசையைக் கற்பதும் கேட்பதும் இசை வழிபாடே எனலாம்.கல்லைக் கூட கனியச் செய்யும் இசை மனிதனுடன் இரண்டறக்கலந்து ஒன்றாகியுள்ளது.இசை இல்லாமல் மனிதனில்லை.என்னுமளவிற்கு இசை மனிதனின் வாழ்வியலில் வேரூன்றியுள்ளது.தாலாட்டுப் பாடினால் தூக்கம் வருகின்றது.சோக கீதம் பாடினால் அழுகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது.காமரஸம் பாடினால் உணர்ச்சி வெளி ஏறிகிறது.துள்ளலிசையில் பாடினால் உற்சாகம் பீறுகிறது மகிழ்ச்சி நிலவுகிறது.நாடி நரம்புகள் புத்துயிர் பெறுகின்றன.கடவுளின் பக்திப்பாடல்களில் நெஞ்சம் நெகிழ்கின்றது.நமது கடவுள் வடிவங்கள் அனைத்திலுமே 'இசை' ஆதார வடிவமாக நிற்கின்றது.சுருங்கச் சொன்னால் மனித வாழ்வியலைப் பொறுத்தமட்டில் நாணயத்தின் இருபக்கங்களாக இசையையும் மனிதனையும் பிரிக்க முடியாதளவிற்கு பண்டைக்காலம் முதல் பின்னிப்பிணைந்து இசை காணப்படுகின்றது.

**திருமதி.ஜெ.உதயகுமார்** M.Phil,
(B.A, PGDM (Merit), PGDE (Merit),
M.A (cultural), M.Ed),
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2003ம் ஆண்டு இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெற்ற இசை விருந்து



கோப்பாய் பிரதேச செயலக
கலாசார நிகழ்ச்சியின் போது
ஆற்றுகை செய்த நடனக்குழு



வலி கிழக்கு பண்பாட்டு பேரவை நடாத்தும்
பண்பாட்டும் பெருவிழா - 2008 .இல்
இடம்பெற்ற வாத்தியப்ருந்தா நிகழ்ச்சி














நிறுவனத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பு ..........





[illegible] உற்சவம் ..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கலை நிலா அரங்கில் கலைஞர்களின் நிகழ்ச்சி ..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழத்தினால் இறுவட்டு வெளியிடப்பட்டுயாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற சிறுவர் சிந்தனைக் கவிதைகளின் ஆற்றுகை - 2007






புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார்
மீது
10 பக்திப்பாடல் பாடியமைக்காவும்,
10 சிறுவர் சிந்தனைக் கவிதைகள்
பாடியமைக்காகவும்
தினக்குரல் பத்திரிகையினால்
வழங்கப்பட்ட
" கலைக்குரிசில் "
பட்டம் வழங்கிய போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




23-வது.-24-வது [illegible] நிகழ்வு பதிவுகளில் சில ..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியக் கலைகளும் செந்நெறிகலைகளும்

தமிழிரிடையே குறிப்பாக இசை, நடனம், இலக்கியம் என்பன செந்நெறிக் கலைகளாகப் பயிலப்பட்டு வருவன.எல்லா இலக்கியமும் இசையும் நடனமும் செந்நெறிக்கலைகள் அல்ல.கர்நாடக சங்கீதம், பரதம், கதகளி, குச்சுப்பிடி ..... என பல செந்நெறிக் கலைகள் பயிலப்பட்டு வருவதைக் காணலாம்.அதாவது மக்களுடைய சமூக நிகழ்வுகளுக்கேற்ப அவை பயிலப்பட்டு வருகின்றன.தமிழ் நாட்டைப் பொறுத்தவரை ஒதுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், முன்னிலைப் படுத்தப்பட்டோரே, செந்நெறிக் கலைகளிலும் ஆர்வம் கொண்டவராகவும், அதனை ரசிப்பவராகவும் காணப்படுகின்றனர்.செந்நெறிக் கலைகளைப் பொறுத்தவரை ஒழுங்கான ஒரு பயில்பு அவசியம், பயிற்சி முக்கியம்.ஒரு கால அளவு தேவைப்படுகிறது.அங்கு புரிதல் என்பது மிக அவசியம்.சரீரம், சாரீரம் ஆகிய இரண்மே ஒத்து வரவேண்டும்.அதனுடைய மொழியை அறிந்து கொள்ள வேண்டும். ஆதலால் இங்கு அறிவு என்பது அவசியமாகின்றது.இக்கலைகளைப் பயில்வதற்கு அறிவு என்பதோடு பொருளியல் தேவையும் அவசியமாகிறது.ஆகவே நகர்புறம் சார்ந்து இக்கலை வழக்கில் இருந்து வருகிறது.அரங்கேற்றம் நிகழ்த்தப்படும் போது தான் அதனுடைய முழுமை வெளிக் கிளம்புகிறது. சிலப்பதிகாரத்தில் மாதவி நடனம் ஆடினாள் என்பதுடன் பதினொரு வகை ஆடல்கள், ஏழ வருடப்பயிற்சி (ஐந்து வயதில் இருந்து பன்னிரண்டு வயது வரை) அதன் ஒழுங்கு முறைகள் என்பவற்றுடன் ஆடப்பட்டமை பற்றி அரங்கேற்று காதை குறிப்பிடுகிறது.நாட்டுப்புற நிகழ்கலைகள் அல்லது கிராமியக் கலைகள் என நாம் அழைக்கும் கலைகள் சமூகத்தில் குறிப்பிட்ட குழுக்களால் நிகழ்த்தப்படுகிறது.அது இடத்திற்கிடம் வேறுபடும்.குறிப்பிட்ட பெயர் கொண்டு அழைக்கப்படாவிட்டாலும் கூட அதனது ஆட்ட முறைமை பாடல் முறைமை என்பன வேறுபடும் தமிழகத்திலும் ஈழத்திலும் இக்கலைகள் பரந்துபட்ட பயில்பு நிலையில் உள்ளன.

கலை என்பது சமூக அழகியல் நிகழ்வாகும்.இது சமூகத்தின் பண்பாட்டுள் நிலை கொண்டு நிற்பது.பண்பாடு என்பது அச்சமூகத்தின் வாழ்க்கை முறை அதற்குள் வாழ்க்கை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் யாவும் (மதம், உணவு, சூழல், மனித உறவுமுறை, வாழ்க்கை நோக்கு, பொருளாதாரம்) இடம்பெறும்.பண்பாட்டின் இயல்புகள் எனப் பின்வருவனவற்றைப் பண்பாட்டு மானிடவியலாளர் முனைப்படுத்திக் கூறுவர்.

பண்பாடு அறியப்படுவது

மனித வாழ்க்கையில் உயிரியல், உளவியல், சூழல், வரலாற்று அம்சங்கள் ஊடாக வருவது

01. பண்பாடு குறிப்பிட்ட அமைப்பினைக் கொண்டது.

02. பண்பாடு குழுவிற்கு குழு அமைப்பினைக் கொண்டது

03. அது அசைவியக்கம் கொண்டது.

04. அதன் காரணமாக வெளிப்படையானவை யாவும் உய்த்துணரப்படுபவையும் உள்ளது.

பண்பாடு என்பது கலைகளின் மூலம் உயிர்ப்பினை ஏற்படுத்திக் கொள்கிறது. அந்த நிலையிலேயே அச் சமூகத்தின் படைப்பியல் உந்ததலும், படைப்பியல் வன்மையும், அழகியல் தொழிற்பாடுகளும் தொழிலியல் முறைகளும் இயங்குகின்ற கலைகளில் முக்கியத்துவம் பெறுகின்றன.அவை பண்பாட்டின் வெளிப்படுகைத்தளமாக அமைவதே கலைக்கும் பண்பாட்டுக்குமுள்ள தொடர்பாகும்.இந்த உறவு காரணமாக அந்தச் சமூகத்தினை எடுத்துணர்த்தும் உயிர்ப்பு மையமாக அமைகிறது.கலை என்பது ஒரு நடைமுறை.அதன் வெளிப்படுகை காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகள் வேறுபடும்.இந்த இடத்திலே மேற்சொல்லப்பட்ட கலைகளும் வெளிப்படும் தமிழரிடையே பல்வேறு கலைகள் பயிலப்பட்டு வருகின்றன.வாய்ச் சொற்கலைகள்,நுண்கலைகள் காட்சிக் கலைகள் ஆற்றுகைக் கலைகள், சடங்குக் கலைகள், தொழில்நுட்பக் கலைகள் என அவை விரிந்து செல்லும்

ஒரு காலத்தில் ஒவ்வொன்றும் வேறுவேறு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டு காலப்போக்கில் செழுமைப்பட்டு மெல்ல மெல்ல கலைத்துவ அம்சங்களைப் பெற்றுக் கொண்டு கலைகளாக வெளிப்படுத்தப்பட்டன.இன்று வெகுசனத் தொடர்பு ஊடகங்களின் பயனால் குக்கிராமங்களிலுள்ள கலைகளைக் கூட அனைவரும் அறிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.இக் கலைகள் பொதுவாகப் பரம்பரை பரம்பரையாக வருவதுமுண்டு.கிராமங்களில் அவர்களுடைய பேச்சுவழக்கு மொழியினூடாக அது வெளிவரும்.இதே நேரத்தில் கிராமியக் கலைகளாய் பயிலப்பட்டு வரும் கோலாட்டம்,கும்மி,கரகம்,காவடி,பொம்மலாட்டம் போன்றன செந்நெறிக் கலைஞர்களால் ஆற்றுகை செய்யப்படுவதையும் நாம் காணலாம்.ஆனால் அவை செந்நெறிக் கலைகளுக்குள்ள தன்மைகளினுடமே அங்கே இடம்பெறும்.ஆகவே அது செழுமைப்படுத்தப்பட்ட ஒரு வடிவமாகவே காணப்படும்.கிராமியக் கலைகளாக நிகழ்த்தப்படும் போது வெளிப்பாட்டு முறைமையில் மாற்றத்தைக் காணலாம்.செந்நெறிக் கலைகளின் வடிவம் என்பது கட்டமைப்பு,தாளம், பாவம் என்பன மட்டுமே மேற்கிளம்புவதாக ஆற்றுகை செய்யப்படும்.கிராமியக்கலைகளில் சடங்கியல் நடைமுறைகள், உணர்ச்சி வெளிப்பாடு முக்கியமாக காணப்படும்.செந்நெறிக்கலைகள் அதன் பயில்பு முறையினால் எப்போதும் மேல்தட்டு வர்க்கத்தினருக்குரியதாக இருந்திருப்பதனை சமூக பண்பாட்டு வரலாற்றினடியாக காணமுடியும்.அவற்றிற்குரிய வாத்தியங்களும் கிராமியக் கலைகளில் பயன்படுத்தப்பட்ட வாத்தியங்களிலிருந்து வேறுபட்டு காணப்பட்டுள்ளன.வீணை, வயலின்,மிருதாங்கம் எனப் பல்வேறுபட்ட வாத்தியங்கள் செந்நெறிக்கலைகளிலும் உடுக்கு,பறை,உறுமி,தப்பு .......... போன்றன கிராமியக் கலைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.இன்று மேடை அளிக்கைகள், ஊடக ஆற்றுகைகள் போன்றவற்றில் செந்நெறி, கிராமிய கலைகளின் கூறுகள் இணைத்துப் பயன்படுத்துவதையும் காணமுடியும்.

நிகழ்ந்து கலைகள் என்கின்ற வகையிலே கிராமியக் கலைகளும், செந்நெறிக் கலைகளும் ஏதோ ஒரு வகையில் மக்களுக்காகவே நிகழத்தப்படுவன.ஆனால் அதனுடைய ரசனை மட்டங்களில் வேறுபாடு காணப்படுகிறது.கர்நாடக சங்கீதத்தை ஓரளவு கற்றவரால் தான் தெலுங்கு கீர்த்தனைகளை அவற்றின் இராக சஞ்சாரங்களின் நுணுக்கங்களை அனுபவித்து உணர முடியும். பரத நாட்டியத்தைச் சிறிதளவேனும் கற்றுணர்ந்தவரால் தான் அதன் முத்திரைகளை விளங்கிக் கொள்ள முடியும்.ஆனால் நாட்டுப்புறக்கலைகள் இரசிப்பதற்கேற்ற ஒரு கற்றலும் அவசியமானதல்ல. விருப்பமும் ஈடுபாடும் தம் பண்பாட்டின் வெளிப்பாட்டுப் பரிச்சயமும் இவற்றுடன் ஒன்றிணைந்து இரசிக்க வைக்கும் படிக்காதவர் படித்தவர் வேறுபாடின்றி எவராலும் அதனை ரசிக்க முடியும் என்பதே அதன் உண்மையாகும்.

**திரு.க.திலகநாதன்**

நாடகத்துறை விரிவுரையாளர்,

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,

கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ.டிலுக்சன்
மிருதங்க அரங்கேற்றத்தின் போது







கலைநிகழ்வின் போது



தீ. வருணியா
அகில இலங்கை
தமிழ்த்தினப் போட்டி – 2018
தனி இசை – பிரிவு II
மூன்றாமிடம்



பண்ணிசைப் போட்டியில் வெற்றியீட்டியமைக்கு வழங்கப்பட்டது

ஆற்றுகையின் போது......
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்வி அமைச்சு

இலங்கை

அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டி

2015



ச.யஜீவா


கொழும்புத் தமிழ்ச் சங்கம்

பவள விழா ஆண்டு

தமிழிசைப் போட்டி

2017

பிரிவு நான்கு

தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப்பெற்ற

யா/ இந்து மகளிர் கல்லூரி மாணவி

யஜீவா சத்தியசீலன் அவர்களுக்கு

இச் சான்றிதழ் வழங்கப்படுகிறது





கலைநிகழ்வின் போது



பாராட்டு விழாவின் போது

ர.யதுசா அவர்களின் ஆற்றுகை
















அகில இலங்கை
தமிழ்த்தினப் போட்டி
பாவோதல் பிரிவு 2
3ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














ஹ.ஹர்ணி
2007 ம் ஆண்டு தனி இசை பிரிவு II -
தமிழ்த்தினப்போட்டியில் 2ம் இடம்பெற்றமை



Trinity College London

Anandajothy Vithyashakar

is awarded

Level 1 Award in
Graded Examination in Music Performance

Grade 1
Electronic Keyboards

with Merit

TRINITY
COLLEGE LONDON

Ofqual





ஓர்கன் பரீட்சை நிலை I இல் திறமைச்சித்தி
பெற்றமைக்கான சான்றிதழ்

அ.வித்தியாசாகர்
அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி
வாசிப்பு - பிரிவு 2 - முதலாம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கழக மாணவன் மு.சுலக்சனின் ஆற்றுகைகளின் பதிவு






















யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில்
2015 ஆண்டு நடன ஆற்றுகைக்காக
மிருதங்கம் வாசித்தமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









மிருதங்க அரங்கேற்றத்தின் போது



ஊரெழு சாயி நிலைய அடிக்கல் நாட்டுவிழாவில்
இடம்பெற்ற இசைநிகழ்ச்சியின் போது



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்
வாணிவிழாவில் நாடக ஆற்றுகைக்கு
மிருதங்க இசை வழங்கிய போது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிறுவன பணிப்பாளர் பற்றி ......

"கலைக்குரிசில்" திருமதி.சிவை குகநேசன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இசைத்துறை விரிவுரையாளராகக் கடமை புரிகின்றார்.இவர் கற்றல் – கற்பித்தற் செயற்பாட்டில் நீண்ட கால அனுபவம் பெற்றவர்.இவரது பாடல்கள் கல்லைக் கூட கனியச் செய்யும் தன்மை வாய்ந்தவை.இவர் சிறுவர் சிந்தனைக் கவிதைகள், பக்திப் பாடல்கள், இலக்கியப்பாடல்கள், வரவேற்புப் பாடல்கள், முதலானவற்றைப் பல்வேறு களங்களில் பாடி இறுவெட்டுக்களை வெளியிட்டு தனக்கான தற்படிவத்தை உருவாக்கி இருப்பவர். சாதாரன கவிதைகள் கூட இவரது இசையிலே உயிர்துடிப்புள்ளதாக மாறிவிடுகின்றன.படைப்பாற்றலிலும் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணுவதிலும் தீவிரமாக ஈடுபட்டு வரும் இவரது வெற்றியின் சிறப்பிற்கு இவரது வாழ்க்கைத் துணைவர் க.குகநேசன் காரணம் என்றால் மிகையாகாது.

இவரது கலைத்துறை வெளிப்பாட்டினைப் பறைசாற்றி நிற்கும் ஸ்ரீ சாயி கலைக் கழகமானது வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், ஓர்கன், தபேலா, பரதம் என்னும் ஆறு துறைகளை அணி செய்து வெள்ளிவிழாக் கொண்டாடும் இவ் வேளையில் " ஸ்ருதிலயம்" என்னும் ஆவண பதிவேடு வெளிவருவது காலத்தின் தேவையாகும்.ஸ்ரீ சாயி கலைக் கழகத்தின் செயற்பாடுகளை ஆவணமாக்கி எதிர்காலச் சந்ததியினரிடம் கையளிக்க வேண்டிய தேவை கலைஞர்களுக்கு உண்டு.

இறைவன் கொடுத்த இசை ஆற்றல், சிந்தனைத் திறன் என்பனவற்றைப் பயன்படுத்தி இசையினூடாக உளவியல் ஆற்றுப்படுத்தல், ஆன்மிக சிந்தனைகளை வளர்த்தல் போன்றவற்றையும் செய்யும் பணியைத் திறம்படச் செய்ய வேண்டும் என்னும் நோக்கோடு செயற்படுவர் இவர்.இவ் வகையில் இவரால் ஆவணப்படுத்தப்படுகின்ற "ஸ்ருதிலயம்" காத்திரமாக படைப்பாகும்.இந்த வரலாற்று ஆவணபதிவேடு இசை உலகிற்கு நல்ல பலன் கொடுக்கும் என்பது என் அசையாத நம்பிக்கை.


**திருமதி.ஜெ.உதயகுமார்**
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org